# பள்ளிக் கல்வித்துறை
# மதுரை மாவட்டம்

# 10

## சிறப்பு வழிகாட்டி
## தமிழ்வழி

வெளியீடு :
முதன்மைக் கல்வி அலுவலர்
மதுரை

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல்                    – குறள்**

**அன்பார்ந்த மாணவர்களே,**

1. உங்களின் இயல்பினை அறிந்து அனைவரும் வெற்றிபெறும் நோக்கத்துடன் எனது வழிகாட்டுதலின் பேரில் உருவாக்கப்பட்ட சிறப்பு வழிகாட்டி இது. இந்த வழிகாட்டி முழுமையும் படித்தால் நீங்கள் வெற்றி பெறுவது உறுதி.

2. படித்ததை எழுதிப் பழகுங்கள், மேலும் படித்த வினா விடைகளை சக மாணவர்களோடு கலந்து பேசி தெளிவாகுங்கள். வெற்றி எளிது.

3. முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை. உங்களால் முடியாதது வேறு எவராலும் முடியாது என்பதை உணருங்கள்.

4. நாளைய நாட்கள் உங்களுக்காகவே காத்திருக்கின்றன. இச்சிறப்பு வழிகாட்டி உங்களை வெற்றிக்கு அழைத்துச் செல்ல இருக்கின்றது. கல்வியிலும் வாழ்க்கையிலும் வசந்தம் பெற வாழ்த்துக்கள் ….. !

முதன்மைக் கல்வி அலுவலர்,

மதுரை.

## நுழையும் முன்

பலவுள் தெரிக பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.

குறுவினா, சிறுவினா, நெடுவினா ஆகிய பிரிவுகளில் பாடநூலில் உள்ள வினாக்களோடு கூடுதல் வினாக்களும் தரப்பட்டுள்ளன.

இவ்வினாக்களோடு தங்களுக்கு தோன்றும் வினாக்களிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பயிற்சி வழங்குக.

மொழித்திறன் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. பாடநூலில் உள்ள அனைத்து பயிற்சிக்கும் பக்க எண் சுட்டப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றோடு தொடர்புள்ள வினாக்களிலும் பயிற்சி வழங்குக.

மாணவர்களின் எழுதும் திறனை மேம்படுத்தி அனைவரும் தேர்ச்சி பெறவும் உயர் மதிப்பெண் பெறவும் உழைக்கும் ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்கள்.

# தமிழ்

**தலைமை :**

**திரு. R. சுவாமிநாதன், M.Sc., B.Ed., M.Phil.,**
முதன்மைக் கல்வி அலுவலர்,
மதுரை மாவட்டம்.

**ஒருங்கிணைப்பாளர்.**

**திரு. சி. தென்கரைமுத்துப் பிள்ளை,**
பொதுத்தேர்வுகள் அமைப்பாளர் மற்றும் தலைமை ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, வேடர், புளியங்குளம்.

**ஆசிரியர் குழு :**

1. **இரா. பாஸ்கரன்,** தலைமை ஆசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி, கொடிமங்கலம்.
2. **ஆ. செல்வராஜ்,** தமிழ் ஆசிரியர்,
புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி, ஞான ஒளிபுரம்
3. **இரா. சுப்பிரமணியன்,** தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, ஆண்டார்கொட்டாரம்.
4. **க. முத்துப்பாண்டி,** தமிழ் ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, உறங்கான்பட்டி.
5. **செ. இரமேஷ் கண்ணன்,** தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, வீரப்பெருமாள்புரம்.
6. **இ. நாகேந்திரன்,** தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, விரகனூர்.
7. **மீனாட்சி சுந்தரம்,** தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, சருகுவலையபட்டி.

# இயல் – 1

**பலவுள் தெரிக.**

1. `எந்தமிழ்நா' என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

**இ) எம் + தமிழ் + நா** ஈ) எந்தம் + தமிழ் + நா

2. `இன்னறும் பாப்பத்தே' என பெருஞ்சித்திரனார் பாடுவது .................. .

அ) பதிற்றுப்பத்து **ஆ) பத்துப்பாட்டு**

இ) தமிழ்விடு தூது ஈ) பிள்ளைத்தமிழ்

3. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் .............. .

அ) பழ. முத்தையா **ஆ) துரை. மாணிக்கம்**

இ) இரா. கிருஷ்ணமூர்த்தி ஈ) சொ. விருதாச்சலம்

4. `பாவலரேறு' என சிறப்பிக்கப்படுபவர் ..................... .

அ) திரு.வி.க. **ஆ) பெருஞ்சித்திரனார்**

இ) வாணிதாசன் ஈ) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

5. `அன்னை மொழியே' என்ற பெருஞ்சித்திரனாரின் பாடல் இடம் பெற்ற நூல் ......... .

**அ) கனிச்சாறு** ஆ) எண்சுவை எண்பது

இ) நூறாசிரியம் ஈ) உலகியல் நூறு

6. **காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் -** நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிகோடிடப்பட்ட பகுதி குறிப்பிடுவது .................. .

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் **ஈ) சருகும் சண்டும்**

7. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றை குறிக்கும் பயிர் வகை ........... .

அ) குலை வகை **ஆ) மணி வகை** இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

8. நெல், கேள்வரகு போன்ற தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொல் .............. .

அ) கோல் **ஆ) தாள்** இ) தூறு ஈ) தண்டு

9. அடிமரத்திலிருந்து பிரியும் மாபெரும் கிளையின் பெயர்

அ) சினை **ஆ) கவை** இ) போத்து ஈ) கொம்பு

10. சோளம், கரும்பு முதலியவற்றின் இலை வகைகளை குறிக்கும் சொல் .............. .

அ) இலை ஆ) ஓலை **இ) தோகை** ஈ) தாள்

11. கரும்பின் நுனிப் பகுதியை குறிக்கும் சொல் ........... .

அ) கொழுந்து ஆ) தளிர் இ) குருத்து **ஈ) கொழுந்தாடை**

12. பூ விரியத் தொடங்கும் நிலை

அ) அரும்பு ஆ) செம்மல் **இ) போது** ஈ) வீ

13. அவரை, உழுந்து முதலியவற்றின் தானியங்களுக்கு வழங்கும் சொல் ............ .

அ) விதை ஆ) முத்து இ) முதிரை **ஈ) பயறு**

14. `சொல்லாய்வுக் கட்டுரைகள்' என்னும் நூலின் ஆசிரியர் ................. .

அ) இளங்குமரனார் **ஆ) தேவநேயபாவாணார்**

இ) கால்டுவெல் ஈ) வீரமாமுனிவர்

15. மலேசியாவில் நடைபெற்ற முதல் உலக மாநாடு எம்மொழிக்காக நடத்தப்பட்டது?

அ) ஹீப்ரு மொழி ஆ) சீனமொழி இ) கிரேக்கம் **ஈ) தமிழ்**

16. வரகு, குதிரைவாலி போன்ற தானிய வகைகளை ................. என அழைப்பர்.

**அ) சிறுகூலங்கள்** ஆ) தானியம்

இ) சம்பா ஈ) முதிரை

17. திராவிட மொழிகளில் ஒப்பியல் இலக்கணத்தை கூறியவர் ................. .

அ) தேவநேயபாவாணர் **ஆ) கால்டுவெல்**

இ) இளங்குமரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

18. தமிழ் தென்றால் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்

**அ) இளங்குமரனார்** ஆ) பாவாணர்

இ) ஜி.யு. போப் ஈ) பெருஞ்சித்திரனார்.

19. `மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ............... .

**அ) வணிக கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிக கப்பல்களும் அணிகலன்களும்

20. சந்தக் கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர் ................. .

அ) பாவாணர் **ஆ) தமிழழகனார்** இ) பெருஞ்சித்திரனார் ஈ) இளநாகனார்

## இயல் – 1

## கவிதைப்பேழை – அன்னை மொழியே ....................

**குறுவினாக்கள் :**

1. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!"- இவ்வரியில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
2. தமிழ் உணர்வைப் பரப்ப பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள் யாவை?
3. பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் யாவை?
4. `அன்னைமொழியே' என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது?
5. பெருஞ்சித்திரனார் தமிழின் தொன்மையை எவ்வாறு போற்றுகிறார்?
6. "இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே" இவ்வரிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல்கள் யாவை?

7. `கன்னிக்குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில்' இவ்வரிக் குறிப்பிடும் `கடல் கொண்ட' என்பதன் பொருள் யாது?

**சிறு வினாக்கள் :**

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?
2. பத்துப்பாட்டு நூல்களைப் பட்டியலிடுக.

**நெடுவினா :**

1. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடை பேச்சு ஒன்று உருவாக்குக.

## கவிதைப்பேழை – இரட்டுற மொழிதல்

**குறுவினாக்கள் :**

1. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
2. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
3. தமிழழகனார் - குறிப்பு வரைக.
4. கடல் எத்தகைய சங்குகளைத் தருகிறது?
5. கடல் எவற்றை எல்லாம் தருகிறது?

**சிறுவினாக்கள் :**

1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
2. உனக்கு தெரிந்த சிலேடைப் பேச்சுக்கள் இரண்டினை எழுதுக.

## உரைநடை உலகம் : தமிழ்ச் சொல் வளம்

**குறு வினாக்கள் :**

1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப் பழங்கள் உள்ளன.
   ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன.
   ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
   மேற்கொண்ட தொடர்களில் சரியான தொடர்களை சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரில் உள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.
2. தமிழ்ச் சொற்கள் பற்றிய கால்டுவெல்லின் கருத்து யாது?
3. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் நான்கினை எழுதுக.
4. தாவரத்தின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
5. பூவின் நிலைகளை குறிக்கும் சொற்கள் யாவை?
6. இரா. இளங்குமரனார் எழுதிய நூல்கள் யாவை?

**சிறுவினாக்கள் :**

1. `புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
2. தானியங்களுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.
3. கெட்டுப்போன காய்கனி வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?

**நெடுவினா :**

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.
2. தமிழ்ச்சொல் வளம் பாடத்தில் உனக்குப் பிடித்த ஏதாவது நான்கு வகைகளை எழுதுக.

**விரிவானம் - உரைநடையின் அணிநலன்கள் :**

1. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.
   சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியை பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்பு பற்றி உரையாடுதல்.
2. `உரைநடையின் அணிநலன்கள்' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள நயமான உரைநடைச் சான்றுகளை எடுத்துரைக்க.

கற்கண்டு : - எழுத்து, சொல்

குறுவினா :

1. `வேங்கை' என்பதை தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்தி காட்டுக.
2. `உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
   வடுக்காண் வற்றாகும் கீழ்'' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையை சுட்டி அதன் இலக்கணம் தருக.
3. உயிரளபடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
4. செய்யுளிசை அளபெடை என்றால் என்ன?
5. இன்னிசை அளபெடை என்றால் என்ன?
6. சொல்லிசை அளபெடை என்றால் என்ன?
7. ஒற்றளபடை என்றால் என்ன?
8. மொழிகளின் வகைகள் யாவை?
9. தொழிற்பெயரை விளக்குக.
10. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?
11. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?
12. எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன?
13. வினையாலணையும் பெயரை விளக்குக.
14. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**சிறுவினா :**

1. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது - இவை வினைமுற்றுக்கள் இவற்றைத் தொழிற் பெயர்களாக மாற்றுக.

## இயல் – 1 இலணக்கணம் (கற்கண்டு)

**பலவுள் தெரிக.**

1. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ………………… .

அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய

இ) கேட்பவர், பாடிய **ஈ) பாடல், கேட்பவர்**

2. உயிரளபடையின் வகைகள்

**அ) மூன்று** ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஐந்து

3. கீழ்காண்பனவற்றுள் முதல் எழுத்துக்கள் அல்லாதவை

அ) வல்லின மெய்கள் ஆ) உயிர்நெட்டெழுத்துக்கள்

**இ) அளபெடைகள்** ஈ) உயிரும் மெய்யும்

4. இசைநிறை அளபெடை என்பது

அ) இன்னிசை அளபெடை **ஆ) செய்யுளிசை அளபெடை**

இ) ஒற்றளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

5. கண்ணன் வந்தான் என்பது

அ) தனிமொழி ஆ) பொதுமொழி **இ) தொடர்மொழி** ஈ) தொழிற்பெயர்

6. எட்டு என்பது

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி

இ) அளபெடை **ஈ) பொதுமொழி**

7. ‘‘ஒருமொழி ஒரு பொருளனவா’’ என நன்னூல் குறிப்பிடுவது

அ) பொதுமொழி ஆ) தொடர்மொழி

**இ) தனிமொழி** ஈ) விணையாலணையும் பெயர்

8. ‘‘விகுதிப் பெறாமல் வினைப் பகுதியே
தொழிற்பெயராதல்’’ என்பதற்கு சான்று

அ) நடத்தல் ஆ) கொல்லாமை இ) ஆளல் ஈ) உரை

9. ‘‘பொறுத்தார் பூமியாள்வார்’’ என்ற தொடரில் வினையாலணையும் பெயர்

அ) பூமியாள்வார் **ஆ) பொறுத்தார்**

இ) பொறுத்தார் பூமியாள்வார் ஈ) எதுவுமில்லை

10. ஒரு வினைமுற்றுப் பெயரின் தன்மையை அடைந்து வரும் பெயர்

அ) தொழிற்பெயர் ஆ) வினையெச்சம்

**இ) வினையாலணையும் பெயர்** ஈ) பெயரெச்சம்

11. தொழில் அல்லது வினை நிகழாதிருப்பதைக் குறிக்கும் பெயர்

அ) விகுதி பெற்ற தொழிற்பெயர் **ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்**

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) முதனிலைத் தெரிந்த தொழிற்பெயர்

## இயல் – 2 இயற்கை

**பலவுள் தெரிக.**

1. உயிரின வாழ்வின் அடிப்படை .......................... .

அ) நிலம் ஆ) நீர் இ) காற்று **ஈ) இயற்கை**

2. மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீடிக்கும் என்று கூறியவர் .... .

அ) திருவள்ளுவர் ஆ) வள்ளலார் **இ) திருமூலர்** ஈ) கம்பர்

3. பிற்கால ஔவையார் தம் குறளில் காற்றைப் பற்றி ..................... என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

அ) காற்று ஆ) வளி **இ) வாயுதாரணை** ஈ) வாயு வழக்கம்

4. கிழக்கிலிருந்து வீசும் காற்றுக்கு .................. என்றும் பெயருண்டு.

அ) கீழைக்காற்று **ஆ) கொண்டல்** இ) குணக்கு ஈ) கீழ்காற்று

5. குட்டு என்று எதனைக் குறிப்பிடுவர்

அ) கிழக்கு ஆ) தெற்கு இ) வடக்கு **ஈ) மேற்கு**

6. வறண்ட நிலப்பகுதியில் வீசும் காற்று .................... .

அ) வறண்ட காற்று **ஆ) வாடைக் காற்று**

இ) தென்றல் காற்று ஈ) கோடைக் காற்று

7. வடக்குத் திசையிலிருந்து வீசும் காற்று .................... .

அ) குணக்கு ஆ) குடக்கு **இ) வாடைக் காற்று** ஈ) கோடைக் காற்று

8. `வண்டொரு புக்க மணவாய்த் தென்றல்' எனும் வரி இடம்பெற்றுள்ள நூல்

**அ) சிலப்பதிகாரம்** ஆ) திருக்குறள் இ) திருமந்திரம் ஈ) புறநானூறு

9. பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது என்ற நூலை இயற்றியவர் ................ .

அ) அரங்கநாதர் ஆ) பத்மகிரி நாதர்

**இ) பலப்பட்டை சொக்கநாதர்** ஈ) மீனாட்சி சுந்தரம்

10. "நதியில் விளையாடிக் கொடியில் தலைவச்சி
நடந்த இளந்தென்றலே" என்ற வரிகளைக் கொண்ட திரைப்படப் பாடலை எழுதியவர் ......... .

அ) வைரமுத்து ஆ) நா. முத்துக்குமார் இ) கண்ணதாசன் ஈ) பாரதிதாசன்

11. "நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி" என்ற சங்கப் பாடலை இயற்றிய பெண்பால் புலவர்

அ) ஔவையார் ஆ) ஆண்டாள்

**இ) வெண்ணிக்குயர்த்தியார்** ஈ) வெள்ளிவீதியார்

12. பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர்

அ) பாரதியார் ஆ) நியூட்டன் **இ) ஹிப்பாலஸ்** ஈ) கலிலியோ

13. ஹிப்பாலஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ............... .

**அ) கிரேக்கம்** ஆ) அமெரிக்கா இ) இங்கிலாந்து ஈ) இந்தியா

14. தென்மேற்கு பருவக்காற்றின் காலம் ..................... .

அ) அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஆ) ஜூன் முதல் ஆகஸ்டு வரை

இ) ஜனவரி முதல் மார்ச் வரை **ஈ) ஜூன் முதல் செப்டம்பர் வரை**

15, இந்தியாவின் முதுகெலும்பு ................... .

அ) கணினித்துறை ஆ) பால்வளம் **இ) வேளாண்மை** ஈ) நெசவு

16. இந்தியாவிற்குத் தேவையான 70 விழுக்காடு மழை அளவை தருவது ................ .

அ) வடகிழக்குப் பருவக்காற்று **ஆ) தென்மேற்குப் பருவக்காற்று**

இ) வடமேற்குப் பருவக்காற்று ஈ) தென்கிழக்குப் பருவக்காற்று

17. வடகிழக்குப் பருவ காலங்களில் ................... உருவாகிப் புயலாய் மாறும்.

அ) வெப்பமண்டலம் ஆ) உயர் அழுத்த மண்டலம்

**இ) காற்றழுத்த தாழ்வு மண்டலம்** ஈ) வெப்பசலனம்

18. `வளிமிகின் வலி இல்லை' எனக் கூறியவர்

அ) இளநாகனார் ஆ) இளங்கோவடிகள்

**இ) ஐயூர் மூபவனார்** ஈ) திருவள்ளுவர்

19. கடுங்காற்று ......... கொண்டு வந்து சேர்க்குமென மதுரை இளநாகனார் குறிப்பிடுகிறார்.

அ) புயல் ஆ) தூசு இ) மழை **ஈ) மணல்**

20. காற்றுள்ளபோதே .................. எடுத்துக்கொள் என்பது புதுமொழி.

அ) மழையை ஆ) காசை இ) மூச்சை **ஈ) மின்சாரம்**

21. உலக அளவில் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா பெற்றுள்ள இடம்

அ) ஏழு **ஆ) ஐந்து** இ) முதல் ஈ) இரண்டாம்

22. இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தில் தமிழகம் ................ இடம் பெற்றுள்ளது.

**அ) முதல்** ஆ) ஐந்தாம் இ) ஏழாம் ஈ) இரண்டாம்

23. காற்றை அதிக அளவு மாசுபடுத்துவதில் இந்தியா ............... இடம் பெற்றுள்ளது.

அ) முதலிடம் ஆ) ஐந்தாம் **இ) இரண்டாம்** ஈ) ஏழாம்

24. உயிர்வளி என்று எதனைக் குறிப்பிடுகிறோம்?

அ) நைட்ரஜன் ஆ) கார்பன் - டை - ஆக்ஸைடு

**இ) ஆக்ஸிஜன்** ஈ) ஹைட்ரஜன்

25. இந்தியாவில் மிகுந்த உயிரிழப்புகளை ஏற்படுத்தும் காரணங்களில் ஐந்தாம் இடம் பெறுவது

அ) நீர் மாசு **ஆ) காற்று மாசு** இ) நில மாசு ஈ) ஒலி மாசு

26. ................. மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைகிறது என சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

அ) நீர் ஆ) நிலம் **இ) காற்று** ஈ) வானம்

27. குளிர்பதனப் பெட்டியிலிருந்து வெளிவரும் நச்சுக் காற்று ............... .

அ) கார்பன் ஆ) புளோரின்

இ) ஆக்ஸிஜன் **ஈ) குளோரோபுளோரோ கார்பன்**

28. ஓசோன் படலம் பாதிப்பதை தவிர்க்கும் பொருட்டு தற்போது பயன்படுத்தப்படும் குளிர் பதனியின் பெயர்

அ) கார்பன் ஆ) புளோரோ கார்பன்

இ) ஹைட்ரஜன் **ஈ) ஹைட்ரோ கார்பன்**

29. உலக காற்று நாள்

அ) ஜுன் 5 ஆ) ஜுலை 15 **இ) ஜுன் 15** ஈ) ஆகஸ்டு 15

30. சேர நாட்டின் .................. துறைமுகத்திற்கு யவன கப்பல்கள் வந்து சென்றன.

அ) கொற்கை **ஆ) முசிறி**

இ) தூத்துக்குடி ஈ) மும்பை

31. எந்த நாட்டு மன்னரின் முடி சூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்கள் பாடப்படுகின்றன.

அ) இங்கிலாந்து ஆ) அயர்லாந்து

**இ) தாய்லாந்து** ஈ) இந்தியா

32. ப்ராண ரஸம் என்பது ................... .

அ) உணவு வகை ஆ) மூலிகை மருந்து

**இ) உயிர் வளி** ஈ) வாகனம்

33. `நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' எனப் பாராட்டப் பெற்றவர் ............. .

அ) பாரதிதாசன் ஆ) வாலி

**இ) பாரதியார்** ஈ) வைரமுத்து

34. பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்

அ) நேசமித்திரன் ஆ) தமிழ்நாடு

**இ) சுதேசமித்திரன்** ஈ) அம்ருதா

35. `சிந்துக்குத் தந்தை' எனப் பாராட்டப் பெற்றவர்

அ) சிந்தன் ஆ) கண்ணதாசன் இ) வாலி ஈ) பாரதியார்

36. "நற்சொல்லை நாங்கள் கேட்டோம்" என்று தலைவி இடம் கூறியது

அ) தலைவன் ஆ) தோழி

**இ) முதுபெண்கள்** ஈ) வழிப்போக்கர்கள்

37. முல்லைப்பாட்டு ................... நூலாகும்.

அ) எட்டுத்தொகை ஆ) பிள்ளைத் தமிழ் **இ) பத்துப்பாட்டு** ஈ) பரணி

38. முல்லை நிலத்தின் பெரும் பொழுது

அ) கோடைகாலம் **ஆ) கார்காலம்**

இ) முன்பனிக்காலம் ஈ) பின்பனிக்காலம்

39. கொன்றை மரம் ……………… நிலத்தின் கருப்பொருளாகும்.

அ) குறிஞ்சி **ஆ) முல்லை** இ) மருதம் ஈ) நெய்தல்

40. முல்லைப்பாட்டு ………………… பாவால் இயற்றப்பட்டது.

அ) வெண்பா ஆ) வஞ்சிப்பா **இ) ஆசிரியப்பா** ஈ) கலிப்பா

41. சுவல் என்பதன் பொருள் ……………… .

அ) தோல் ஆ) தேள் **இ) தோள்** ஈ) கழுத்து

42. வீ என்பது ………………… .

அ) வீழ்ச்சி **ஆ) மலர்** இ) இலை ஈ) காய்

43. `பாடுஇமிழ் பனிக்கடல் பருகி ' என்னும் முல்லைப் பாட்டு உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் கொந்தளித்தல் ஆ) கடல்நீர் ஒலித்தல்

**இ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்** ஈ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

44. பொருந்தும் விடை வரிசையை தேர்ந்தெடுக்க.

அ) கொண்டல் - 1) மேற்கு

ஆ) கோடை - 2) தெற்கு

இ) வாடை - 3) கிழக்கு

ஈ) தென்றல் - 4) வடக்கு

அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

## இயல் – 2 செய்யுள் உரைநடை

**குறுவினா :**

1. உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
2. வசன கவிதை குறிப்பு வரைக.
3. பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
4. காற்றின் தன்மை யாது?
5. மின்னாற்றல் குறிப்பு வரைக.
6. சிறுவர் நிதியம் (UNICEF) காற்று மாசுபாடு பற்றி கூறியது யாது?
7. விரிச்சி விளக்குக.
8. முல்லைப்பாட்டு குறிப்பு வரைக.

**சிறுவினா :**

1. நீர் தன்னை பற்றிப் பேசினால் …………… உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

2. சோலைக்காற்றும் மின்விசிறி காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
3. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.
4. இலக்கியங்களில் காற்று எவ்வாறு கையாளப்படுகிறது?
5. ஹிப்பாலஸ் பருவக்காற்று பற்றி எழுதுக.

**நெடுவினா :**

1. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
2. மலர்ந்தும் மலராத பாதி மலர்போல ................ .
   கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

**விரிவானம் :**

1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலி குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

## இயல் – 2 இலக்கணம்

**குறுவினா :**

1. தண்ணீர் குடி, தயிர் குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதி தொடரில் அமைக்க.
2. மாஅல் பொருளும் இலக்கணக் குறிப்பு தருக.
3. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?
4. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. வேற்றுமைத்தொகை விளக்குக.
6. வினைத்தொகை விளக்குக.
7. பண்புத் தொகை விளக்குக.

**சிறுவினா :**

1. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

## இயல் – 2 இலக்கணம்

**பலவுள் தெரிக.**

1. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?
   அ) ஐந்து ஆ) மூன்று **இ) ஆறு** ஈ) ஒன்பது
2. பண்புத்தொகை பயின்று வந்த சொற்றொடர்
   அ) தமிழ்த்தொண்டு **ஆ) வட்டத்தொட்டி** இ) வீசுத் தென்றல் ஈ) கண்மலர்
3. கறிக்கடை என்பது
   அ) பண்புத் தொகை ஆ) வேற்றுமைத் தொகை
   இ) இருபெயரொட்டுப் பண்புத் தொகை
   **ஈ) இரண்டாம் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை**

4. வினைத் தொகையை குறிப்பது

அ) வளையொலி ஆ) முறுக்கு மீசை வந்தார்

**இ) அலைகடல்** ஈ) இன்மொழி

5. உம்மைத் தொகை பயின்று வருவது

**அ) அண்ணன் தம்பி** ஆ) அண்ணனும் தம்பியும்

இ) மார்கழியும் கோலமும் ஈ) வீசும் காற்று

6. மலர்க்கை என்பது

அ) உம்மைத் தொகை **ஆ) உவமைத்தொகை**

இ) வேற்றுமைத் தொகை ஈ) பண்புத்தொகை

7. **மார்கழித் திங்களன்று மணிமொழி வந்தாள் -** அடிக்கோடிட்ட சொற்கள் குறிப்பது

**அ) இருபெயரொட்டு பண்புத்தொகை, அன்மொழித்தொகை**

ஆ) உவமைத்தொகை, பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை, வினைத்தொகை

ஈ) உவமைத்தொகை, அன்மொழித்தொகை

8. காலம் கரந்த பெயரெச்சம்

அ) பண்புத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) உவமைத்தொகை **ஈ) வினைத்தொகை**

9. `மலர்க்கை' என்பதில் மறைந்து வருவது

அ) வேற்றுமை உருபு ஆ) உருபும் பயனும்

**இ) உவம உருபு** ஈ) உம் எனும் இடைச்சொல்

10. `தமிழ்மொழி' என்பது

அ) உம்மைத்தொகை **ஆ) இருபெயரொட்டு பண்புத்தொகை**

இ) வேற்றுமைத்தொகை ஈ) உவமைத்தொகை

## இயல் – 3

**பலவுள் தெரிக.**

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர்

அ) தமிழர் பண்பாட்டின் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

ஆ) தமிழர் வாழை இலைக்கு பண்பாட்டில் தனித்த இடமுண்டு

**இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு**

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

2. `விருந்தினரைப் பேணுவதற்கு பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழை பணயம் வைத்து விருந்தளித்தான்' என்கிறது புறநானூறு - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை

அ) நிலத்திற்கேற்ற விருந்து **ஆ) இன்மையிலும் விருந்து**

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

3. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் நற்பண்பு ........... .

**அ) விருந்தோம்பல்** ஆ) உதவி செய்தல்

இ) மருத்துவம் செய்தல் ஈ) மதித்தல்

4. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது .......... எனும் நூல்.

அ) குறுந்தொகை ஆ) புறநானூறு

இ) நற்றிணை **ஈ) சிறுபாணாற்றுப்படை**

5. அமெரிக்காவில் வாழை இலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருவது ............. .

அ) சிகாக்கோ தமிழ்ச் சங்கம் **ஆ) மின்சோட்டா தமிழ்ச்சங்கம்**

இ) கனடா தமிழச்சங்கம் ஈ) தமிழ்ச்சங்கம்

6. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என ஔவையார் உரைக்கும் நூல் ............ .

அ) ஆத்திசூடி ஆ) உலகநீதி

**இ) கொன்றை வேந்தன்** ஈ) திரிகடுகம்

7. வீட்டில் இரவில் வாயிலை அடைக்கும் முன்னர் உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா என்று கேட்கும் வழக்கம் இருந்ததனைக் கூறும் நூல் ....... .

அ) புறநானூறு **ஆ) குறுந்தொகை**

இ) பரிபாடல் ஈ) காசிக் காண்டம்

8. .................. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை

அ) கைம்மாறு கருதுதல் **ஆ) தனித்து உண்ணாமை**

இ) பணம் பெறுதல் ஈ) தானே உண்ணல்

9. திருக்குறளில் `விருந்தோம்பல்' என்னும் அதிகாரம் இடம் பெற்றுள்ள இயல்

அ) ஊழியல் **ஆ) இல்லறவியல்**

இ) பாயிரவியல் ஈ) ஒழிபியல்

10. வழிச்செல்வோருக்காக மிகுதியான சத்திரங்கள் .................. காலத்தில் கட்டப்பட்டன.

அ) முகலாயர் **ஆ) நாயக்கர், மராட்டியர்**

இ) சீக்கியர், நாயக்கர் ஈ) சீக்கியர், முகலாயர்

11. காசிக்காண்டம் என்பது .................... .

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்

**இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படும் நூல்

12. வெற்றி வேற்கை நூலின் மறு பெயர்

அ) நற்றிணை **ஆ) நறுந்தொகை**

இ) குறுந்தொகை ஈ) காசிக் காண்டம்

13. ஒப்புடன் முகம் மலர்ந்தே

உபசரித்து உண்மை பேசி - இப்பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் ..................... .

**அ) விவேக சிந்தாமணி** ஆ) வெற்றி வேற்கை

இ) மலைபடுகடாம் ஈ) காசிக்காண்டம்

14. அதிவீரராமபாண்டியன் இயற்றிய நூலின் பெயர்

**அ) வெற்றி வேற்கை** ஆ) நீதி நெறி விளக்கம்

இ) ஆத்திசூடி ஈ) கொன்றை வேந்தன்

15. ‘‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’’ என்னும் அடியில் பாக்கம் என்பது ............. .

அ) புத்தூர் ஆ) மூதூர்

இ) பேரூர் **ஈ) சிற்றூர்**

16. மலைபடுகடாம் ................. எனவும் அழைக்கப்படுகிறது.

அ) பொருநாற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை

**இ) கூத்தராற்றுப்படை** ஈ) பெரும்பாணாற்றுப்படை

17. மலைபடுகடாமின் பாட்டுடை தலைவன் ................ .

அ) பழையன் ஆ) குமணன்

இ) சேரலாதன் ஈ) **நன்னன்**

18. கூத்தாற்றுப்படை ................. அடிகளை கொண்ட நூல்

அ) 543 **ஆ) 583**

இ) 563 ஈ) 585

19. மோப்பக் குழையும் அனிச்சம் என்று தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் ....... .

அ) சிலப்பதிகாரம் **ஆ) திருக்குறள்**

இ) புறநானூறு ஈ) மலைபடுகடாம்

20. <u>**நச்சுப்படாதவன்**</u> செல்வம் - அடிகோடிட்ட சொல்லிற்கு பொருள் தருக.

**அ) விரும்பப்படாதவன்** ஆ) விருப்பு வெறுப்பு இல்லாதவன்

இ) பிறருக்கு உதவுபவன் ஈ) நடுவில் இருப்பவன்

21. இன்மை புகுத்திவிடுவது ..................... .

அ) முயற்சி ஆ) திரு

**இ) முயற்றின்மை** ஈ) தாளாண்மை

22. நச்சுபடாதவன் செல்வம் ................ போன்றது.

அ) அரியது ஆ) இனியபழம்

இ) கண்ணோட்டம் இல்லாதது **ஈ) நச்சுமரப்பழம்**

23. கெடுப்பார் இலாது கெடும் மன்னன் ................ .

அ) பெரியாரை பேணுபவன் ஆ) மெய்ப்பொருள் காண்பவன்

**இ) இடிப்பார் இல்லாதவன்** ஈ) கண்ணோட்டம் இல்லாதவன்

# இயல் – 3

**குறுவினா :**

1. விருந்தினரை மகிழ்வித்து கூறும் முகமன சொற்களை எழுதுக.
2. `இறடிப் பொம்மல் பெறுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
3. `தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலிலிட்டு குற்றி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
4. விருந்தோம்பல் என்பது என்ன?
5. விருந்தினர் என யாரை அழைக்கலாம்?
6. ஆற்றுப்படை குறித்து எழுதுக.
7. பண்டைக்காலத்தில் மக்களை மகிழ்வித்த கலைஞர்களை கூறுக.
8. மலைபடுகடாம் - சிறுகுறிப்பு வரைக.
9. இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து புறநானூறு கூறுவது யாது?
10. அதிவீரராமபாண்டியன் இயற்றிய வேறு நூல்கள் யாவை?
11. காசிக்காண்டம் எனும் நூல் எவற்றை பாடுகிறது?
12. ஆற்றுப்படை நூல்கள் யாவை?

**சிறுவினா :**

1. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?
2. கூத்தனை கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
3. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் இதில் தலைவைக்க திண்டும் அமைத்தனர். திருவிழா காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களை அழைத்து அன்போடு விருந்தளிப்பதை சில இடங்களில் காண முடிகிறது. இப்படியாக காலமாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்களை குறித்து கருத்துக்களை எழுதுக.
4. வாழை இலையில் உண்பதன் சிறப்பு குறித்து கூறுக.
5. மினசோட்டா தமிழ்ச் சங்கம் கொண்டாடும் வாழை இலை விருந்து விழா குறித்து விளக்குக.
6. `விருந்தோம்பலுக்கு வறுமை ஒரு தடை இல்லை' - உணர்த்த புறநானூற்று சான்று காட்டி நிறுவுக. ***(அல்லது)*** உனது சொந்தக் கருத்தை எழுதுக.
7. உணவு விருந்து குறித்த பழமொழிகளை திரட்டி பட்டியலிடுக.

**நெடுவினா :**

1. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்கு புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலால் மாறியிருப்பதை விளக்குக.
2. உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**திருக்குறள் வினாக்கள் :**

1. **<u>நச்சுப்படாதவன்</u>** செல்வம் - இத்தொடரில் அடிகோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

2. பொருளுக்கேற்ற அடியை பொருத்துக.

உயிரைவிட சிறப்பாக பேணி காக்கப்படும் - ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

ஊரில் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது - உயிரினும் ஓம்பப்படும்.

ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவார் - நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று.

3. கொடுப்பதுஉம் துய்ப்பதுவும் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

4. `வேலோடு நின்றாள் இடுஎன்றது போலும்' - எது?

5. பகைவர் இல்லாமல் மன்னவன் தானே கெடுவது எதனால்?

## இயல் – 3 இலக்கணம் (கற்கண்டு)

### தொகாநிலைத் தொடர்கள்

**குறுவினா :**

1. எழுது என்றாள் என்பது விரைவு காரணமாக எழுது, எழுது என்றாள் என அடுக்குத்தொடரானது. சிரித்து பேசினாள் என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

2. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

3. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?

4. அடுக்குத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.

**சிறுவினா :**

1. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

2. தொகா நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? சான்று தருக.

**விரிவானம் :**

1. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க.

## இயல் – 3 இலக்கணம்

**பலவுள் தெரிக:**

1. தொகா நிலைத் தொடரின் வகைகள்

அ) ஆறு ஆ) மூன்று

**இ) ஒன்பது** ஈ) பத்து

2. பேருந்து வருமா? என்பது

அ) விளித்தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்

இ) வேற்றுமைத் தொடர் **ஈ) எழுவாய் தொடர்**

3. இடைச் சொல்லுடன் பெயரோ வினையோ தொடரும் தொடர்

அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்

**இ) இடைச்சொல் தொடர்** ஈ) வேற்றுமைத் தொடர்

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைகிறது.

**அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

5. கூவிய குயில் - எவ்வகை தொடர்?

அ) எழுவாய்த் தொடர் **ஆ) பெயரெச்சத் தொடர்**

இ) வேற்றுமைத் தொடர் ஈ) விளித்தொடர்

6. **கேட்ட கதையையே மீண்டும் மீண்டும் கூறினார்** - அடிக்கோடிட்டவை எவ்வகைத் தொடர்கள்?

அ) வினையெச்சத் தொடர், அடுக்குத் தொடர்

ஆ) பெயரெச்சத் தொடர், வினைமுற்றுத் தொடர்

**இ) பெயரெச்சத் தொடர், அடுக்குத் தொடர்**

ஈ) வேற்றுமைத் தொடர். வினைமுற்றுத் தொடர்

7. வினைமுற்றுடன் பெயர் தொடர்வது

அ) பெயரெச்சத் தொடர் ஆ) எழுவாய்த் தொடர்

**இ) வினைமுற்றுத் தொடர்** ஈ) வினையெச்சத் தொடர்

8. `படிக்க வேண்டிய காலத்தில் மாணவனே படி' என்னும் தொடரில் இடம் பெறும் தொகா நிலைத் தொடர்கள்

அ) வினையெச்சத் தொடர், எழுவாய்த் தொடர்

**ஆ) பெயரெச்சத் தொடர், விளித்தொடர்**

இ) வினைமுற்றுத் தொடர், எழுவாய்த் தொடர்

ஈ) வினைமுற்றுத் தொடர், விளித் தொடர்

9. `அறிஞருக்குப் பொன்னாடை' என்பது

அ) இரண்டாம் வேற்றுமைத் தொடர் ஆ) மூன்றாம் வேற்றுமைத் தொடர்

**இ) நான்காம் வேற்றுமைத் தொடர்** ஈ) ஐந்தாம் வேற்றுமைத் தொடர்

10. ஏர் புதிதா? என்பது

அ) விளித்தொடர் **ஆ) எழுவாய்த் தொடர்**

இ) வேற்றுமைத் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

## இயல் – 4

**பலவுள் தெரிக:**

1. பரிபாடல் என்பது பின்வருவனவற்றுள் ஒன்று

அ) பத்துப்பாட்டு **ஆ) எட்டுத்தொகை**

இ) பதினென்கீழ்கணக்கு ஈ) சிற்றிலக்கியம்

2. உயிரினங்களின் மனிதனை உயர்த்திக் காட்டுவது அவர்களின் .................. .

அ) பணம் ஆ) விருப்பம்

**இ) சிந்தனை** ஈ) பெருமை

3. சங்கநூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்

அ) புறநானூறு ஆ) அகநானூறு

**இ) பரிபாடல்** ஈ) ஐங்குறுநூறு

4. பெப்பர் எந்த நாடு உருவாக்கிய இயந்திர மனிதன்

அ) இந்தியா **ஆ) ஜப்பான்** இ) சீனா ஈ) இலங்கை

5. செய்தி – 1 புதிது புதிதான வழிகளில் மனிதப் பணித் திறனைக் கூட்டுகின்ற தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு

செய்தி - 2 இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில் நுட்பம் செயற்கை நுண்ணறிவு

அ) செய்தி – 1 மட்டும் சரி ஆ) செய்தி – 1 சரி, செய்தி – 2 தவறு

இ) செய்தி – 2 மட்டும் சரி ஈ) **செய்தி – 1 சரி, செய்தி – 2 சரி**

6. பெருமாள் திருமொழி கவிதையில் இடம் பெற்ற தொடர்

அ) பெருமை முயற்சிதரும் ஆ) **மாளாத காதல் நோயாளன்**

இ) அருளை பெருக்கி அறிவை திருத்தி ஈ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது

7. கருவளர் வானத்து இசையில் தோன்றி – இவ்வடியில் இசை என்பது

அ) தானம் ஆ) புகழ் இ) பறை **ஈ) பேரொலி**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

வாளால் அறுத்து சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவ கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

8. மேலுள்ள பாடல் அடிகள் இடம் பெற்ற நூல் எது?

அ) பரிபாடல் **ஆ) பெருமாள் திருமொழி**

இ) திருவிளையாடற்புராணம் ஈ) கம்பராமாயணம்

9. மாயம் என்பதன் பொருள்

அ) இல்லாதது **ஆ) விளையாட்டு**

இ) தீராது ஈ) சிறப்பு

10. பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள்

அ) பார்ப்பன் – அடியேனே **ஆ) வாளால் – மாளாத**

இ) மீளாத் – துயர்தரினும் ஈ) நோயாளன் – மருத்துவன்

11. மாளாதா காதல் – இலக்கண குறிப்பு

அ) எதிர்மறை பெயரெச்சம் **ஆ) வினையெச்சம்**

இ) பண்புத் தொகை ஈ) உரிச்சொல் தொடர்

www.tamilthugal.blogspot.com

12. இப்பாடலின் ஆசிரியர்

அ) குலசேகராழ்வார் ஆ) கீரந்தையார்

இ) கம்பர் ஈ) நப்பூதனார்

## இயல் – 5 கல்வி

## உரைநடை உலகம் – மொழிபெயர்ப்புக் கல்வி

**பலவுள் தெரிக:**

1. மாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

**அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது**

ஆ) காப்பிய காலத்தில் மொழிப்பெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

2. ஒரு மொழியால் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்று கூறியர்

அ) குலோத்துங்கன் **ஆ) மணவை முஸ்தபா**

இ) மு.கு. ஆகந்நாத ராஜா ஈ) பாரதியார்

3. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் …………… பகுதியில் குறிப்பிடுகிறார்?

அ) புணரியல் ஆ) உரியியல்

இ) இடையியல் **ஈ) மரபியல்**

4. மொரு சாஸ்ட்டு என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள்

அ) மறுக்கிறோம் ஆ) விடை தர முடியாது

**இ) விடை தர அவகாசம் வேண்டும்** ஈ) பதில் வேண்டாம்

5. வாய்காலிலிருந்து கங்கை வரை என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர்

அ) ராகுல் **ஆ) கணமுத்தையா**

இ) பாரதி ஈ) கல்யாண்ஜி

6. கருத்துப் பகிர்வை தருவதால் மொழிப்பெயர்ப்பை ………………… என்று குறிப்பிடுவர்.

அ) கருத்து கலை ஆ) மொழிபெயர்ப்பு கலை

**இ) பயன் கலை** ஈ) நிகழ் கலை

7. தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாடியவர் யார்?

**அ) பாரதியார்** ஆ) பாரதிதாசன்

இ) வாணிதாசன் ஈ) கவிமணி

**குறுவினா :**

1. வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்ட இலக்கியங்களைக் குறிப்பிடுக.
2. இந்தியாவில் இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர் யார்? எந்நூலுக்காகக் கிடைத்தது?

3. underground drainage - தமிழிலும் மலையாளத்திலும் எவ்வாறு மொழிப்பெயர்த்தார்கள்?

4. ஜெர்மன் மொழி மொழிப்பெயர்ப்பின் மூலம் அறிமுகமானவர் யார்? அவரின் சிறப்பு யாது?

5. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

**சிறுவினா :**

1. ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிப்பெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளரின் பார்வையாளர்களுக்கு தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதை காதணி கேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிப் பெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார்கள் அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்து பொருத்திக் கொண்டும் அவரது மொழியில் புரிந்து கொள்வார். இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

2. மொழிபெயர்ப்பு எவ்வாறு செயல்பட வேண்டும்?

3. மொழிபெயர்ப்பு எவற்றிற்கெல்லாம் தேவைப்படுகிறது?

**நெடுவினா :**

1. தமிழின் இலக்கியவளம் - கல்விமொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துக்கள் - பிறதுறை கருத்துக்கள் - தமிழுக்கு செழுமை - மேற்கண்ட குறிப்புகளை கொண்டு செம்மொழி தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிப்பெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றிற்கு நடுபக்க கட்டுரை எழுதுக.

## கவிதைப் பேழை

## நீதிவெண்பா - க.பா. செய்குதம்பி பாவலர்

**பலவுள் தெரிக:**

1. அருந்துணை என்பதைப் பிரித்தால் .................... .

**அ) அருமை + துணை** ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

2. `அருளை பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை' என்று இவ்வரிகளில் - குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல்

**இ) கல்வி** ஈ) இலக்கியம்

3. சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்

அ) சதாவதானிப் புலவர் ஆ) உமறுபுலவர்

**இ) செய்குதம்பிப் பாவலர்** ஈ) ஆறுமுக நாவலர்

4. `கற்றவர் வழி அரசு செல்லும்' என்று கூறுவது

அ) நீதி இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்

**இ) சங்க இலக்கியம்** ஈ) காப்பிய இலக்கியம்

5. செய்குதம்பிப்பாவலரின் நினைவைப் போற்றும் வகையில் மணிமண்டபமும் பள்ளியும் அமைந்துள்ள ஊர்

**அ) இடலாக்குடி** ஆ) இலால்குடி இ) கன்னியாகுமரி ஈ) சாயல்குடி

**குறுவினா :**

1. செய்குதம்பிப் பாவலரின் கல்விப் பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
2. சதாவதானம் - குறிப்பு வரைக.
3. கல்வியின் பெருமை குறித்து இலக்கியங்கள் கூறும் கருத்துக்களை எழுதுக.
4. ஏன் கல்வியைப் போற்றிக் கற்கவேண்டும் என பாவலர் குறிப்பிடுகிறார்?

**சிறுவினா :**

1. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்கு செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
2. கல்வியைப் போற்றிக் கற்க வேண்டுமென செய்குதம்பிப் பாவலர் கூறும் செய்திகளை எழுதுக.

## திருவிளையாடற் புராணம்

**பலவுள் தெரிக:**

1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ............... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்.

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் **ஈ) மன்னன், இறைவன்**

2. திருவிளையாடற்புராணத்தில் வரும் பாண்டிய மன்னர் யார்?

அ) குலசேகர பாண்டியன் **ஆ) குசேலப் பாண்டியன்**

இ) குணசேகரப் பாண்டியன் ஈ) குணசீலப் பாண்டியன்

3. திரு - ஆலவாயைச் சிவபெருமான் என்னவென்று குறிப்பிடுகிறார்?

அ) காட்டுவனம் **ஆ) கடம்பவனம்** இ) பாலைவனம் ஈ) சோலைவனம்

4. கபிலரின் நண்பன்

அ) குசேலப்பாண்டியன் **ஆ) இடைக்காடனார்**

இ) பரஞ்சோதி முனிவர் ஈ) அதிவீரராம பாண்டியன்

5. முரசுக் கட்டிலில் அறியாது கண்ணுறங்கியவர் ................ கவரி வீசியவர் ........... .

அ) கபிலர், சிவன் ஆ) குசேல பாண்டியன், இடைக்காடனார்

**இ) மோசிக் கீரனார் பெருஞ்சேரல் இரும்பொறை**

ஈ) பெருஞ்சேரல் இரும்பொறை, மோசிக்கீரனார்

6. மன்னரின் பிழையை உணர்த்த இறைவன் சென்று தங்கியக் கோயில்

**அ) வடதிரு ஆலவாயில்** ஆ) கடம்பவனம்

இ) மதுரை ஈ) சிதம்பரம்

7. `மூரித்தீம் தேன் வழிந்து ஒழுகு தாரானை கண்டு' இதில் `தாரானை' என்னும் சொல் குறிப்பது

**அ) பாண்டியன்** ஆ) இறைவன்

இ) புலவர் ஈ) கபிலர்

8. `விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவர் கேட்டு' இதில் `மீனவர்' என்பது யாரைக் குறிக்கிறது?

அ) கபிலர் **ஆ) பாண்டிய மன்னன்**

இ) இடைக்காடர் ஈ) சேரன்

9. `நீபவனத்தை நீத்து ஒரு போதேனும் நீங்குவம் அல்லேம்' என்று கூறியவர்

அ) குசேலபாண்டியன் ஆ) இடைக்காடர்

**இ) இறைவன்** ஈ) மோசிக்கீரனார்

10. `இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன்' இதில் `யான்' என்பது யாரைக் குறிக்கும்?

அ) கபிலன் ஆ) இடைக்காடர்

**இ) பாண்டியன்** ஈ) பெருங்கௌசிகனார்

**குறுவினா :**

1. ''கழித்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல'' - இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?
2. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
3. இடைக்காடனாரை மன்னன் எவ்வாறு அவமதித்தான்?
4. இடைக்காடனார் இறைவனிடம் சினந்து கூறியது என்ன?
5. பாண்டிய மன்னன் இறைவனிடம் தன் குற்றத்தையும் பொருத்தருளுமாறு எவ்வாறு வேண்டினான்?
6. பாண்டியன் புலவர்களிடம் வேண்டியது யாது?

**சிறுவினா :**

1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்கு சிறப்புப் செய்தது ஏன்? விளக்கம் தருக.
2. ''இமையப்பாவை தன்னையும் சொல்
பொருளான உன்னையுமே இகழ்ந்தான்'' - இடஞ்சுட்டி விளக்குக.
3. இறைவன் திருக்கோயிலை விட்டு நீங்கியது ஏன்? எங்கு சென்றார்?
4. சொல்லேருழவனுக்கு கவரி வீசிய வில்லேருழவன் - இடம் சுட்டி விளக்குக.

**நெடுவினா :**

1. இறைவன், புலவர், இடைக்காடான் குரலுக்கு செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

## விரிவானம் - புதிய நம்பிக்கை

1. "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே - என்கிறது வெற்றி வேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையை பற்றிய உங்களின் கருத்துக்களை விவரிக்க.

## கற்கண்டு : வினா-விடை வகைகள், பொருள்கோள்கள்

**பலவுள் தெரிக :**

1. "எனக்கு எழுதித் தருவாயா?" என்ற வினாவுக்கு "உனக்கு எழுதித் தராமல் இருப்பேனா"? - என்று விடையளிப்பது.
அ) ஏவல் விடை **ஆ) வினா எதிர் வினாதல் விடை**
இ) மறை விடை ஈ) சுட்டு வடை

2. **பட்டியல் 1ஐ பட்டியல் 2 - உடன் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) அறிவினா | - | கொடையாளர் இரவலரிடம் கேட்பது |
| 2) அறியா வினா | - | ஆசிரியர் மாணவரிடம் கேட்பது |
| 3) கொளல் வினா | - | மாணவன் ஆசிரியரிடம் கேட்பது |
| 4) கொடை வினா | - | கடைக்காரரிடம் வாங்குபவர் கேட்பது |

**அ) 2, 3, 4, 1** ஆ) 1, 2, 3, 4
இ) 3, 1, 4, 2 ஈ) 4, 2, 3, 1

3. `சொல்லரும் சூழ்பசுவம் பாம்பின் தோற்றம் போல்' எனத் தொடங்கும் பாடலில் உள்ள பொருள்கோள் ...................... .
அ) கொண்டு கூட்டுப்பொருள்கோள் **ஆ) ஆற்றுநீர் பொருள்கோள்**
இ) நிரல் நிறை பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

**குறுவினா :**

1. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின் விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ ................ இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டால் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
2. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. விடை எத்தனை வகைப்படும் அவையாவை?
4. பொருள்கோள் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. வெளிப்படை விடைகள் என்றால் என்ன? அவை யாவை?
6. குறிப்பு விடைகள் என்றால் என்ன? அவை யாவை?

**சிறுவினா :**

1. "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையை சுட்டி விளக்குக.
2. வினா வகைகள் விடை வகைகள் இணைந்து உரையாடல் வடிவில் எழுதுக.
3. நிரல் நிறை பொருள்கோள் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? ஒன்றை மட்டும் சான்றுடன் விளக்குக.
4. வினா / விடை வகைகளை சான்றுடன் விளக்குக.

## இயல் – 5 இலக்கணம்

1. வினாவின் வகைகள்
அ) எட்டு **ஆ) ஆறு**
இ) மூன்று ஈ) பத்து

2. அறியாமையால் வினவும் வினா
அ) அறிவினா **ஆ) அறியா வினா**
இ) ஐய வினா ஈ) ஏவல் வினா

3. மகன் தாயிடம் தின்பண்டம் வாங்க காசு தாருங்கள் என வினவுவது
அ) அறியாவினா ஆ) ஏவல் வினா
இ) கொடை வினா **ஈ) கொளல் வினா**

4. இச்செயலைச் செய்ததும் மங்கையா? மணிமேகலையா? என வினவுதல்
**அ) ஐய வினா** ஆ) அறிவினா இ) அறியா வினா ஈ) ஏவல் வினா

5. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா?” என வழிபோக்கர் கேட்பது ................. வினா
“அதோ அங்கு நிற்கும்” என்று மற்றொருவர் கூறியது ............... விடை.
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
**இ) அறியா வினா, சுட்டு விடை** ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. விடை வகைகள்
அ) ஆறு **ஆ) எட்டு** இ) பத்து ஈ) நான்கு

7. வெளிப்படை விடைகள் என்பன
அ) ஏவல் விடை, உறுவது கூறல் விடை
**ஆ) சுட்டு விடை மறைவிடை, நேர்விடை**
இ) உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை
ஈ) இனமொழி விடை, ஏவல் விடை

8. பாடம் புரிந்ததா? எனும் வினாவிற்கு உனக்கு புரிந்ததா? என்று கூறும் விடை
அ) ஏவல் விடை ஆ) நேர்விடை
இ) இனமொழி விடை **ஈ) வின எதிர் வினாதல் விடை**

9. `இது செய்வாயா?' என்னும் வினாவுக்கு நீயே செய் என்று விடை கூறுவது
அ) இனமொழி விடை **ஆ) ஏவல் விடை**
இ) மறை விடை ஈ) நேர் விடை

10. மறுத்துக் கூறும் விடை
அ) வினா எதிர் வினாதல் விடை **ஆ) மறை விடை**
இ) உற்றது உரைத்தல் விடை ஈ) உறுவது கூறல் விடை

11. பொருள்கோளின் வகைகள்
அ) எட்டு ஆ) ஆறு இ) பத்து ஈ) ஏழு

12. `அடிதொறும் வான் பொருள்
அற்று அற்று ஒழுகும்' பொருள்கோள்
அ) தாப்பிசை பொருள்கோள் ஆ) அடிமறி மாற்று பொருள்கோள்
**இ) ஆற்று நீர் பொருள்கோள்** ஈ) கொண்டு கூட்டு பொருள்கோள்

13. எழுவாய், பயனிலைகளை வரிசைப்படுத்தி பொருள் கொள்வது

அ) ஆற்று நீர் பொருள்கோள் **ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்**

இ) எதிர் நிரல் நிறை பொருள்கோள் ஈ) கொண்டு கூட்டு பொருள்கோள்

14. விலங்கொடு மக்கள் அனைய இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர் - என்னும் குறட்பாவை பொருள் கொள்ளுதல்

அ) ஆற்று நீர் பொருள்கோள் ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்

**இ) எதிர் நிரல் நிறை பொருள்கோள்** ஈ) கொண்டு கூட்டு பொருள்கோள்

15. `கோப்புடை மொழிகளை ஏற்பழி

இசைப்பது' .......

**அ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்** ஆ) தாப்பிசை பொருள்கோள்

இ) ஆற்று நீர் பொருள் கோள் ஈ) நிரல் நிறை பொருள்கோள்

## இயல் – 5 இலக்கணம்

**பலவுள் தெரிக :**

1. தமிழுக்கு கதி என்னும் அழைக்கப்படும் நூல் என்பது

**அ) கம்பராமாயணம் - திருக்குறள்**

ஆ) கலிங்கத்துப்பரணி - திருவாசகம்

இ) மணிமேகலை - திருக்குறள்

ஈ) திருக்குறள் - சிலப்பதிகாரம்

2. மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் ஒன்று

அ) தேவதுூந்தா ஆ) தெருக்கூத்து

**இ) குடக்கூத்து** ஈ) தோற்பாவைக் கூத்து

3. `கம்பன் இசைத்த கவியெல்லம் நான்' என்று பெருமைப்படும் கவிஞர்

அ) கா.ப. செய்யகு தம்பி பாவலர் ஆ) பரஞ்சோதி முனிவர்

**இ) பாரதியார்** ஈ) குமரகுருபரர்

4. பிள்ளைத் தமிழின் பருவங்கள்

அ) எட்டு ஆ) ஏழு

இ) ஐந்து **ஈ) பத்து**

5. **செய்தி - 1 :** போலச் செய்தல் பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரை ஆட்டமும் ஒன்று.

**செய்தி - 2 :** பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்கு பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

அ) செய்தி - 1 மட்டும் சரி ஆ) செய்தி -1 சரி. செய்தி - 2 தவறு

இ) செய்தி - 2 மட்டும் சரி **ஈ) செய்தி - 1 சரி செய்தி 2 சரி**

6. `பூத்தொடுத்தல்' கவிதையில் இடம் பெற்ற தொடர் .................. .

அ) என் மனமே பூவாகும் ஆ) என் மனமே குழந்தையாகும்

இ) என் மனமே கவிதையாகும் **ஈ) என் மனமே நூலாகும்**

7. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளுக்கு பொருத்தமான நிகழ்வு எது?

குறிப்பு - 1 : வானத்து தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுவது

குறிப்பு - 2 : ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்

அ) தேவதூந்துபி ஆ) ஒயிலாட்டம்

இ) தேவராட்டம் ஈ) பொய்க்கால் குதிரை ஆட்டம்

8. நெடுந்திரை என்பதன் பொருள்

அ) கடல் **ஆ) பெரிய அலை**

இ) குளம் ஈ) ஆறு

9. "ஆழநெடுந்திரை ஆறு" - இதில் குறிக்கப்பெறும் ஆறு என்பது

அ) சரஸ்வதி ஆறு ஆ) சரையு ஆறு

**இ) கங்கை ஆறு** ஈ) யமுனை ஆறு

10. "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா" என்று கூறியவர்

**அ) சுரதா** ஆ) பாரதிதாசன்

இ) பாரதியார் ஈ) கண்ணதாசன்

11. சுழி என்பது

அ) நெற்றியில் அணிவது ஆ) காலில் அணிவது

இ) காதில் அணிவது **ஈ) தலையில் அணிவது**

12. `காவடி' என்ற சொல்லில் `கா' என்பதன் பொருள்

அ) சோலை ஆ) காகம்

**இ) பாரம் தாங்கும் தோல்** ஈ) காத்தல்

13. கம்பர் தன் காப்பியத்திற்கு இட்ட பெயர் .................. .

அ) கம்பராமாயணம் **ஆ) இராமாவதாரம்**

இ) ராம சரிதை ஈ) கம்பரசம்

14. கோசல நாட்டில் கொறை இல்லாத காரணம் ............ .

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிந்ததால்

**ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

15. மலர்கள் தரையில் நழுவும் எப்போது

அ) அள்ளி முகர்ந்தால் **ஆ) தளர பிணைந்தால்**

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**குறு வினாக்கள் :**

1. உறங்குகின்ற கும்ப கன்னா `எழுந்திராய் எழுந்திராய்'

காலதூதர் கையிலே `உறங்குவாய் உறங்குவாய்'

கும்ப கன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

2. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதையடிகள் உணர்த்தும் அழகை எழுதுக.
3. நிகழ் கலைகள் சிலவற்றை எழுதுக.
4. தெருக்கூத்து நிகழும் களம் யாது?
5. புலி ஆட்டம் குறித்து ஏதேனும் இரண்டு கருத்துக்களை எழுதுக.
6. காவடியின் பல்வேறு வடிவங்களை குறிப்பிடுக.
7. தப்பாட்டம் குறித்து தருக.
8. நா. முத்துசாமி தெருக்கூத்திற்கு ஆற்றிய பணிகள் சிலவற்றை எழுதுக.
9. `இராசசோழன் தெரு' எங்கு உள்ளது?
10. `என் மனமே நூலாகும் நுண்மையுற்றாலொழிய' இக்கவிதை உணர்த்தும் கவியழகை எடுத்து எழுதுக.
11. கவிஞர் உமா மகேஸ்வரியின் படைப்புள் சிலவற்றை எழுதுக.
12. பிள்ளைத் தமிழ் குறித்து எழுதுக.
13. ஆண்பாற் பிள்ளைத் தமிழின் கடைசி மூன்று பருவம் கூறுக.
14. `கம்பராமாயணம்' - நூல் குறிப்பு எழுதுக.
15. கம்பர் பற்றி முது மொழிகளை கூறுக.
16. செங்கீரைப் பருவம் குறித்து எழுதுக.

**சிறுவினாக்கள் :**

1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புற பாடலில் வெளியிடப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.
3. மக்கள் பண்பாட்டின் பதிவுகளான நிகழ்கலைகளை நிறுவுக.
4. புலி ஆட்டம் குறித்து எழுதுக.
5. இராமனின் மேனி அழகை எவ்வாறெல்லாம் கம்பர் வருணிக்கிறார்?
6. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துக்களை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றிற்கான விடைகளையும் எழுதுக.

**நெடுவினா :**

1. நெகிழிப் பைகளில் தீமைகள் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றினை எழுதுக.
2. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள். - அவற்றை வளர்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.
3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்றத் தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்தெடுத்த பூக்களைப் போன்று வரிசைத் தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியை பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாக கம்பன் காட்டும் கவி ...... தண்டலை மயில்கள் ஆட ...... இவ்வுரையை தொடர்க.

# இயல் – 7 விதை நெல்

**பலவுள் தெரிக :**

1. `மாலவன்குன்றம் போனாலென்ன? வேலவன்குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ................ .
   **அ) திருப்பதியும் திருத்தணியும்** ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. தமிழினத்தை ஒன்று படுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதியது .............. .
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் **ஈ) சிலப்பதிகாரம்**
3. சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர் ................ .
   அ) புதுமைப்பித்தன் **ஆ) மா.பொ. சிவஞானம்**
   இ) கோவிந்தராசன் ஈ) இ.எஸ். தியாகராஜன்
4. மா.பொ.சி. யின் இயற்பெயரான ஞானபிரகாசம் என்பதை சிவஞானம் என இளம் வயதில் மாற்றி வைத்தவர் ............... .
   **அ) சரபையர்** ஆ) சச்சிதானந்தம் இ) பி.வி. வாசு ஈ) மங்கல அழகனார்
5. சென்னை மாகாணத்தில் இருந்து பிரித்து ஆந்திரம் அமைய ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு நபர் ஆணையத்தின் தலைவர் ................. .
   **அ) நீதிபதி வாஞ்சு** ஆ) நீதிபதி பட்டேல்
   இ) நீதிபதி வாசு ஈ) நீதிபதி நாரிமன்
6. சென்னையை மீட்க தன் முதலமைச்சர் பதவியை துறந்தவர் ............... .
   அ) காமராசர் ஆ) பிரகாசம்
   **இ) இராஜாஜி** ஈ) ஓமந்தூர் ரெட்டியார்
7. மா.பொ.சி. யின் சாகித்தியா அக்காடமி விருது பெற்ற நூல் ................. .
   அ) வள்ளலாரும் பாரதியும் ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்
   **இ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு** ஈ) எனது போராட்டம்
8. சரியான அகர வரிசையில் தேர்ந்தெடுக்க
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   **இ) உழவு, ஏர், மண், மாடு** ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**ஏர் புதிது :**

1. `பொன் ஏர்' பூட்டுதல் என்பது ................ .
   அ) தை முதல் நாள் கொண்டாடப்படுவது ஆ) மாட்டுப் பொங்கல் விழா
   **இ) சித்திரைத் திங்களில் நடத்தப்படும் விழா** ஈ) அறுவடை நாள் விழா
2. ஏர் புதிதா? என்னும் கவிதையை இயற்றியவர் .................. .
   அ) மா.பொ. சிவஞானம் **ஆ) கு.ப. இராஜகோபாலன்**
   இ) ந.ர. முருகவேல் ஈ) ந. பார்த்தசாரதி

**மெய்க்கீர்த்தி :**

1. "தன்னாட்டு மக்களுக்கு தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தி தொடர் உணர்த்தும் பொருள் .................. .
   அ) மேம்பட்ட நிர்வாக திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் **ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

2. மெய்க்கீர்த்தி என்பது ...................... ஆகும்.

அ) சாசனம் ஆ) நடுகல்

இ) செப்பேடு **ஈ) கல்இலக்கியம்**

3. கோப்பரகேசரி, திருபுவனச் சக்ரவர்த்தி என்று பட்டங்கள் கொண்டவர் ............... .

**அ) இராஜராஜசோழன்** ஆ) இராஜேந்திர சோழன்

இ) குலசேகரன் ஈ) அதிவீரராமபாண்டியன்

4. இராஜராஜன் காலத் தமிழ் கல்வெட்டு காணப்படும் இடம் ................... .

அ) ராமநாதபுரம் ஆ) காஞ்சிபுரம்

இ) மாமல்லபுரம் **ஈ) தஞ்சாவூர்**

5. புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை ............... .

அ) கல்வெட்டுகள் **ஆ) மெய்க்கீர்த்தி**

இ) சிலைகள் ஈ) செப்பேடுகள்

**சிலப்பதிகாரம் :**

1. அடிகள் நீரே அருளுக என்று இளங்கோவடிகளிடம் கூறியவர் ............ .

அ) இளங்கோவடிகள் **ஆ) சீத்தலைசாத்தனார்**

இ) செங்கூட்டுவன் ஈ) கவுந்தியடிகள்

2. `நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று கூறியவர் ................. .

**அ) இளங்கோவடிகள்** ஆ) மணிமேகலை

இ) சீத்தலைசாத்தனார் ஈ) கவுந்தியடிகள்

3. வெற்றிலை, எண்ணெய் விற்போரை குறிக்கும் சொற்கள்

அ) பாசவர், வாசவர் ஆ) காருகர், கஞ்சகாரர்

**இ) பாசவர், ஓசுநர்** ஈ) காழியர், ஓசுநர்

4. பிட்டு, அப்பம் விற்போரை குறிக்கும் சொற்கள் ................. .

அ) பாசவர், வாசவர் ஆ) பரதவர், ஓசுநர்

**இ) காழியர், கூவியர்** ஈ) காழியர், வாசவர்

5. பட்டினும், மயிரினும் பருத்தி நூலினும் கட்டுநுண் வினையர் ................. .

அ) காழியர் ஆ) கூவியர்

**இ) காருகர்** ஈ) பகர்வணர்

6. `உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என அழைக்கப்படும் காப்பியம் ............ .

அ) வளையாபதி ஆ) சீவகசிந்தாமணி

**இ) சிலப்பதிகாரம்** ஈ) குண்டலகேசி

7. `ஓசுநர்' என்னும் பெயர் ............... குறிக்கும்.

அ) வெற்றிலை விற்போரை ஆ) அணி விற்போரை

**இ) எண்ணெய் விற்போரை** ஈ) நகை விற்போரை

8. `வெறுக்கை' என்பதன் பொருள் ................... .

அ) விலை **ஆ) செல்வம்** இ) பவளம் ஈ) துணி

**குறுவினா :**

1. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் மா.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
2. **பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறி இடுக.**
   பழங்காலத்திலே பாண்டியன் ஆண்டப் பெருமையைப் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமை தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - மா.பொ.சி.
3. மா.பொ.சி. க்கு சிவஞானம் என்ற பெயர்வரக் காரணம் யாது?
4. சிலம்புச் செல்வருக்கு தமிழக அரசு செய்த சிறப்பு யாது? அவை எங்கெங்கு உள்ளன?
5. 1906 - ஆம் ஆண்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் இரண்டினைக் கூறுக.
6. தமிழகத்தின் எல்லைகளாக வேங்கடமலை, குமரிமுனை இருந்தது பற்றிக் கூறும் தமிழிலக்கியங்கள் யாவை?

**ஏர் புதிது :**

1. கு.ப. ராவின் படைப்புகள் யாவை?
2. கு.ப.ரா. பணியாற்றிய இதழ்களின் பெயர்களைத் தருக.
3. பொன் ஏர் பூட்டுதல் நிகழ்வு குறித்து எழுதுக.
4. எவை புதிது, எவை புதிதன்று என்று எவற்றை கவிஞர் கு.பா.ரா. குறிப்பிடுகிறார்?
5. தமிழர் பண்பாட்டின் மகுடம் எது?

**சிலப்பதிகாரம் :**

1. பாசவர், வாசவர், பல்நிலை விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
2. அடிகள் நீரே அருளுக - யார் யாரிடம் கூறியது?
3. மருவூர்பாக்க வீதிகளில் விற்கப்பட்ட மணப்பொருட்கள் யாவை?
4. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - விளக்கு.
5. மருவூர் பாக்கத்தில் உள்ள வீதிகள் யாவை?

**மெய்க்கீர்த்தி :**

1. மெய்க்கீர்த்தி பாடப்படுவதின் நோக்கம் யாது?
2. மெய்க்கீர்த்தி யாரைப் பற்றி பேசுகிறது?
3. சோழ நாட்டில் மக்கள் புலம்புவதும், கலக்கமடைவதும் இல்லை - எதனால்?
4. கல்லில் பொறிப்பவர்களின் பெயர் என்ன?

**சிறுவினா :**

1. மா.பொ.சி. அவர்கள் புத்தகப் பித்தன் ஆனது பற்றி குறிப்பு வரைக.
2. தமிழர்களின் கடல் கடந்த வணிகத்திற்கான சான்று தருக.
3. மா.பொ.சியின் சிறை வாழ்வுப் பற்றி எழுதுக.
4. கல்லில் பொறிப்பவர்களின பெயர் என்ன?

**சிறுவினா :**

1. மா.பொ.சி. அவர்கள் புத்தகப் பித்தன் ஆனது பற்றி குறிப்பு வரைக.
2. தமிழர்களின் கடல் கடந்த வணிகத்திற்கான சான்று தருக.
3. மா.பொ.சி. யின் சிறைவாழ்வுப் பற்றி எழுதுக.
4. ‘‘தலையைக் கொடுத்தேனும் தலைநகரை காப்போம்’’ - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

**ஏர் புதிது :**

1. "முதல் மழை விழுந்ததும்" என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப. ராஜகோபாலன் கவி பாடுகிறார்?
2. உங்கள் ஊரில் நடைபெறும் விவசாயத்தைக் கண்டு அங்கு பயிரிடப்படும் பயிரைப் பற்றி எழுதுக.

**மெய்க்கீர்த்தி :**

1. இராஜராஜசோழன் எவ்வாறு புனைந்துரைக்கப்படுகிறான்?

**சிலப்பதிகாரம் :**

1. பகர்வனர் திரிதரு நகர வீதியும்,
   பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
   கூட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
   தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
   அ) இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது?
   ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
   இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக
   ஈ) காருகர் - பொருள் தருக
   உ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருட்கள் யாவை?
2. உரைப்பாட்டு மடை - விளக்குக.
3. மருவூர்பாக்கத்தில் அமைந்த வீதிகள் குறித்து எழுதுக.

**நெடுவினா :**

1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.
2. சிலப்பதிகார மருவூர்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
3. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

## இயல் – 7 கற்கண்டு புறப்பொருள் இலக்கணம்

**குறுவினாக்கள் :**

1. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.
2. புறத்திணை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
3. பாடாண் திணை யாருக்கானது?
4. பொதுவியல் திணைகள் யாவை?
5. தும்பை திணை குறித்துக் கூறு.
6. வாகைப்பூ - விவரி.
7. மதில்போர் பற்றி புறத்திணைகள் யாவை?
8. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை பட்டியலிடுக.

**சிறுவினாக்கள் :**

1. அவந்திநாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டை கைப்பற்ற நினைக்கிறான்? அப்போர் நிகழ்ப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

**விரிவானம் : மங்கையராக பிறப்பதற்கே**

1. `மங்கையராக பிறப்பதற்கே' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள பெண் சாதனையாளர்களை பற்றி குறிப்பு எழுதுக.
2. நிகழ்வுகளை தொகுத்து அறிக்கை எழுதுக.
மகளிர் நாள் விழா
இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் :
கலையரங்கத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் கூடுதல் - தலைமை ஆசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவர் தலைவரின் நன்றியுரை.

## இயல் – 7 இலக்கணம்

1. புறத்திணைகளின் வகைகள்
அ) 6 **ஆ) 12** இ) 7 ஈ) 5
2. பொருள் இலக்கணத்தின் வகைகள்
அ) 4 ஆ) 12 இ) 7 **ஈ) 2**
3. நிரை கவர்தல் எத்திணைக்குரியது?
அ) குறிஞ்சி ஆ) வஞ்சி **இ) வெட்சி** ஈ) கரந்தை
4. மதிலை வளைக்கும் போரில் சூடும் பூ
அ) நொச்சி **ஆ) உழிஞை** இ) தும்பை ஈ) கரந்தை
5. இட்லிப்பூ என்று அழைக்கப்படுவது
அ) வஞ்சிப்பூ ஆ) வாகைப்பூ **இ) வெட்சிப்பூ** ஈ) தும்பைப்பூ
6. உழிஞை பூவின் வேறு பெயர்
அ) இட்லிப்பூ ஆ) கொட்டைகரந்தை
**இ) முடக்கொற்றான்** ஈ) கருநொச்சி
7. இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடி போரிடுவதன் காரணம்
அ) நாட்டைக் கைப்பற்றுதல் ஆ) ஆநிரை கவர்தல்
**இ) வலிமையை நிலைநாட்டல்** ஈ) கோட்டையை முற்றுகையிடல்
8. மதில்போர் பற்றிய திணைகள்
அ) வெட்சி, கரந்தை **ஆ) நொச்சி, உழிஞை**
இ) கைக்கிளை, பெருந்திணை ஈ) வஞ்சி, காஞ்சி
9. கீழ்காண்பனவற்றுள் மருத நிலத்திற்குரிய மலர் எது?
அ) வெட்சி ஆ) கரந்தை
**இ) நொச்சி** ஈ) உழிஞை
10. கைக்கிளையும் பெருந்திணையும்
அ) புறத்திணைக்குரியது ஆ) அகத்திணைக்குரியது
**இ) இருத்திணைகளுக்கும் உரியது** ஈ) எத்திணைக்கும் உரியதல்ல
11. போரைத் தொடங்கும் நிகழ்வாக புறத்திணைக் கூறுவது
அ) வாகைத்திணை **ஆ) வெட்சித்திணை**
இ) வஞ்சித்திணை ஈ) தும்பைத்திணை
12. வெற்றிப் பெறுதலும் புகழ்ந்து பாடுதலும்
அ) தும்பை, வாகை ஆ) தும்பை, பாடாண்
**இ) வாகை, பாடாண்** ஈ) பொதுவியல், பாடாண்

13. வெட்சித்திணைக்கு புறத்தே அமையும் திணை

**அ) கரந்தை** ஆ) வஞ்சி

இ) காஞ்சி ஈ) உழிஞை

14. பொருந்தா காமத்தைக் குறிக்கும் திணை

**அ) கைக்கிளை** ஆ) கரந்தை

இ) பொதுவியல் ஈ) பெருந்திணை

15. ஆநிரைக்காக நடந்த போர்கள்

**அ) வெட்சி, கரந்தை** ஆ) தும்பை, வாகை

இ) நொச்சி, உழிஞை ஈ) கைக்கிளை, பெருந்திணை

## இயல் – 8

1. தமிழர் பொருள் ஈட்டி ...................... இன்புற்றனர்.

அ) சேமித்து ஆ) செலவு செய்து

இ) அறம் செய்து ஈ) தாமே

2. சங்க காலத்தில் ................. மனித உறவின் மையமாக இருந்தது.

அ) பணம் ஆ) உறவு

இ) அறம் ஈ) நட்பு

3. கவிதை வாழ்க்கையின் திறனாய்வு என்று கூறியவர்

அ) பாரதியார் ஆ) திருவள்ளுவர்

இ) ஆர்னால்டு ஈ) கால்டுவெல்

4. அறம் செய்வதில் .................... நோக்கமாக இருக்கக் கூடாது என்பது சங்க கால மக்களின் கருத்தாக இருந்தது.

அ) சுயநலம் ஆ) வணிகம்

இ) உதவிபெறும் ஈ) புகழ்

5. சங்க பாக்களில் அறம் பற்றி அறிவுரைகள் பெரும்பாலும் யாரை முதன்மைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

அ) மக்கள் ஆ) அமைச்சர்கள்

இ) அரசர்கள் ஈ) விதி

6. அரத்தின் குறியீடுகள்

அ) சிம்மாசனம், செங்கோல் ஆ) செங்கோல், வெண்பொற்குடை

இ) நியாயத்தராசு, சிம்மாசனம் ஈ) செங்கோல், நியாயத் தராசு

7. குற்றங்களை ................ அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்.

அ) குற்றம் ஆ) குலம் இ) அறம் ஈ) செல்வம்

8. நீர் நிலைப் பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் காண்பது ................ கடமை.

அ) வேளாண்குடிமக்கள் ஆ) பொதுமக்கள்

இ) அரசன் ஈ) அமைச்சர்

9. துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது .................. .

அ) அவையம் ஆ) அவயம்

இ) அகம் ஈ) புறம்

10. போர் அறம் என்பதில் போரின் கொடுமையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர்கள்

அ) விலங்கு ஆ) பறவை

இ) பெண்கள் ஈ) நல்லவர்கள்

11. வீரத்தைப் போலவே .......... தமிழர்களால் விரும்பப்பட்டது.

அ) விளையாட்டு ஆ) சுற்றுலா

இ) உணவு விருந்து ஈ) கொடை

12. எது மகிழ்ச்சி?

அ) பிறர் துன்பமடைதல் ஆ) தனது மகிழ்ச்சி

இ) பிறர் மகிழ்ச்சி ஈ) தன் மகிழ்ச்சியை மறத்தல்

13. செல்வத்தின் பயன்............. .

அ) சேமிப்பு ஆ) செலவு

இ) ஈதல் ஈ) முதலீடு

14. செல்வத்தின் பயன் ஈதல் என்றவர்

அ) சிவபெருமான் ஆ) தருமி

இ) நக்கீரனார் ஈ) மாங்குடி மருதனார்

15. கடையெழு வள்ளல்களின் பெருமையைக் கூறும் நூல்

அ) பெரும்பாணாற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை

இ) நாலடியார் ஈ) நான்மணிக்கடிகை

16. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்று ஔவையார் யாரைக் குறிப்பிடுகிறார்?

அ) குலேசலர் ஆ) ஆதியன்

இ) கர்ணன் ஈ) தர்மர்

17. இரவலர் வராவிட்டால் தேடி வரவழைத்து தரும் இயல்புடையவர் என நச்செள்ளையார் சுட்டுவது

அ) அதியமான் ஆ) கிருஷ்ணன்

இ) சேரலாதன் ஈ) கர்ணன்

18. எல்லாவற்றையும் கொடுப்பவன் மலையனின் திருமுடிக்காரி என்று கூறியவர்

அ) கம்பர் ஆ) கபிலர்

இ) சாத்தனார் ஈ) ஔவையார்

19. பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார்

அ) பாவேந்தர் ஆ) பரணர்

இ) நச்செள்ளையார் ஈ) கபிலர்

20. ஒருவருக்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டு விடுதல் மேலானது என .......... கூறுகிறது.

அ) திருக்குறள் ஆ) ஆத்திச்சூடி

இ) கலித்தொகை ஈ) நாலடியார்

21. பிறர் துன்பத்தை தம் துன்பமாகக் கருதுதல் பற்றிக் கூறியவர்
அ) திருவள்ளுவர் ஆ) கபிலர்
இ) நல்லுந்துவனார் ஈ) பாரி வள்ளல்
22. நிறைவடைகிறவனே செல்வன் என்கிறத ............ .
அ) பொதுவுடைமை ஆ) முதலாளித்துவம்
இ) தாவோயியம் ஈ) பௌத்தம்
23. ............ ஓர் அதிசயத் திறவு கோல்.
அ) நாக்கு ஆ) பதிற்றுப் பத்து
இ) நற்றிணை ஈ) புறநானூறு
24. உதவி செய்தலை உதவியாண்மை என்று குறிப்பிடுபவர்
அ) கபிலர் ஆ) பெருஞ்சித்திரனார்
இ) ஈழத்து பூதன் தேவனார் ஈ) பரணர்
25. போதி தருமருக்குக் கோயில் கட்டி சிலை வைத்தவர்கள்
அ) இந்தியர்கள் ஆ) சீனர்கள்
இ) ஜப்பானியர்கள் ஈ) இலங்கைத் தமிழர்கள்
26. பௌத்த சமயத் தத்துவத்திலிருந்து உருவானது
அ) மார்க்ஸியம் ஆ) முதலாளித்துவம்
இ) ஜென் தத்துவம் ஈ) தாவோயியம்
27. ................ உலகம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை.
அ) கடவுள் ஆ) அரசன்
இ) மனிதன் ஈ) இயக்கம்
28. சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்
அ) வண்ணதாசன் ஆ) கண்ணதாசன்
இ) காளிதாசன் ஈ) பாரதிதாசன்
29. வீட்டைத் துடைத்துச் சாயம் பூசுவது இவ்வடி குறிப்பிடுவது
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
30. மேன்மை தரும் அறம் என்பது .......... .
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறு பிறப்பில் பயன்பெறலாம் என்று அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
31. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ........... .
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
32. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ............. .
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது
ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

## இயல் – 8 செய்யுள், உரைநடை

**குறுவினா :**

1. அவையம் - குறிப்பு வரைக.
2. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
3. அரசின் கடமையாகச் சொல்லப்பட்டவை எவை?
4. அறங்காறவையம் குறித்து எழுதுக.
5. தமிழர் போர் அறம் காத்ததைப் பற்றி எழுதுக.
6. கண்ணதாசன் - குறிப்பு வரைக.

## இயல் – 8 செய்யுள், உரைநடை

**சிறுவினா :**

1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு சில எடுத்துக்காட்டுகள் தரு.
2. சுற்றுச்சூழலை பேணுவதே இன்றைய அறம் என்ற தலைப்பில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவக்குக.
3. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களை தொடர்பு படுத்தி ஒரு பத்தி அமைக்க.
4. சங்க காலத்தில் அறத்தில் வணிகநோக்கம் கொள்ளாமை குறித்து எழுதுக.
5. மன்னர்கள் காத்த அரசியல் அறம் குறித்து எழுதுக.

**நெடுவினா :**

1. கண்ணதாசனின் காலக் கணிதம் என்னும் கவிதையில் பொதிந்துள்ள நயங்களை எழுதுக.

## இயல் – 8 செய்யுள், உரைநடை

**குறுவினா - இலக்கணம்**

1. கொள்வோர் கொள்க : குரைப்போர் குரைக்க !
   உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது
   அ) அடியெதுகையை எடுத்து எழுதுக.
   ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக. கொள்க குரைக்க
2. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
3. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும்.
   துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது - இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.
4. யாப்பின் உறுப்புகள் யாவை?
5. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. ஓசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. வெண்பாவின் வகைகள் யாவை?
8. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?
9. ஓரசைச் சீரினை எழுதுக.
10. ஈரசைச் சீரினை எழுதுக.
11. மூவகைச் சீரினை எழுதுக.

## இயல் – 8 சிறுவினா – இலக்கணம்

1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
2. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
3. யாப்போசை தரும் பாவோசை பற்றி எழுதுக.
4. மூவகைச் சீரினை எழுதுக.

**விரிவானம் - நெடுவினா**

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளரினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும். ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி

## இயல் – 8 இலக்கணம்

1. யாப்பின் உறுப்புகள்
   அ) ஆறு ஆ) எட்டு
   இ) நான்கு ஈ) ஐந்து
2. பாலின் வகைகள்
   அ) மூன்று ஆ) பத்து
   இ) நான்கு ஈ) ஆறு
3. இணையைக் கண்டறிக.
   i) வெண்பா - 1) செப்பல் ஓசை
   ii) ஆசிரியப்பா - 2) அகவல் ஓசை
   iii) கலிப்பா - தூங்கலோசை
   iv) வஞ்சிப்பா - துள்ளல் ஓசை
   அ) i - 1, ii - 2, iii - 4, iv - 3 ஆ) i - 2, ii - 3, iii - 4, iv - 1
   இ) i - 1, ii - 2, iii - 3, iv - 4 ஈ) i - 1, ii - 3, iii - 2, iv - 4
4. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா
   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
5. குறளும் நாலடியாரும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா
   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
6. வெண்பாவின் வகைகள்
   அ) 6 ஆ) 5 இ) 4 ஈ) 3
7. ஆசிரியப்பாவின் வகைகள்
   அ) 6 ஆ) 5 இ) 4 ஈ) 3
8. ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் முடியும் பா
   அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா
   இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

9. ஈரசைச்சீர் மிகுதியாகப் பயின்று வரும் பா

அ) அகவற்பா　　ஆ) வெண்பா

இ) கலிப்பா　　ஈ) வஞ்சிப்பா

10. முதல் அடி நான்கு சீராகவும் இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும் வெண்பா

அ) சிந்தியல் வெண்பா　　ஆ) இன்னிசை வெண்பா

இ) குறள் வெண்பா　　ஈ) பஃறொடை வெண்பா

11. வெண்பா இச்சொல்லை அலகிட வரும் வாய்ப்பாடு

அ) தேமா　　ஆ) புளிமா

இ) கருவிளம்　　ஈ) கூவிளம்

12. மூவகைச் சீர், நேர் என முடிய வரும் வாய்ப்பாடு

அ) மாச்சீர்　　ஆ) விளச்சீர்

இ) காய்ச்சீர்　　ஈ) கலிச்சீர்

13. வெண்பாவின் ஈற்றுச் சீர் நிறைவு என முடிய வரும் ஈற்றுச்சீர்

அ) நாள்　　ஆ) மலர்

இ) காசு　　ஈ) பிறப்பு

14. பதிமூன்று அடிக்கும் மேற்பாடு வரும் வெண்பா

அ) கலி வெண்பா　　ஆ) பஃறொடை வெண்பா

இ) இன்னிசை வெண்பா　　ஈ) நேரிசை வெண்பா

15. சொற்பொழிவாற்றுவது போல் அமைந்த ஓசை

அ) செப்பலோசை　　ஆ) துள்ளல் ஓசை

இ) அகவலோசை　　ஈ) தூங்கலோசை

## இயல் – 9

**பலவுள் தெரிக :**

1. சுதந்திர இந்தியாவின் மகத்தான சதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ............. .

அ) அறிவியல் முன்னேற்றம்

ஆ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

இ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்

ஈ) வெளிநாட்டு முதலீடு

2. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது ............. .

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தவர்

3. எந்த திரைபடத்திற்காக ஜெயகாந்தன் குடியரசுத் தலைவர் விருது பெற்றார்?

அ) சிலநேரங்களில் சில மனிதர்கள்　　ஆ) ஊருக்கு நூறுபேர்

இ) யாருக்காக அழுதான்　　ஈ) உன்னைப்போல ஒருவன்

4. ஜெயகாந்தன் எழுதிய சிறுகதை தொகுப்புகளில் ஒன்று ................ .

அ) யுகசந்தி ஆ) யாருக்காக அழுதான்

இ) உன்னைப்போல் ஒருவன் ஈ) சுந்தர காண்டம்

5. ஜெயகாந்தனின் மொழிபெயர்ப்புகளில் ஒன்று

அ) வாழ்விக்க வந்த காந்தி ஆ) பிரளயம்

இ) கைவிலங்கு ஈ) ஒருபிடி சோறு

6. ஜெயகாந்தனுக்கு சாகித்திய அகாதெமி விரு பெற்றுக் கொடுத்த புதினம்

அ) சுந்தரகாண்டம் ஆ) சிலநேரங்களில் சில மனிதர்கள்

இ) குரு பீடம் ஈ) கருணையினால் அல்ல

7. முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு என்பதை ஜெயகாந்தன் பின்வருமாறு மொழிபெயர்த்தார்

அ) ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் ஆ) சுந்தரகாண்டம்

இ) பாரீசுக்குப் போ ஈ) ஒரு கதாசிரியரின் கதை

8. இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும் .................... இவ்வடிகளில் கற்காலம் என்பது.

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

9. நாகூர் ரூபி எழுதிய நாவல் ............... .

அ) இனிப்பும் கரிப்பும் ஆ) தேவன் வருவாரா

இ) புதிய வார்ப்புகள் ஈ) கப்பலுக்குப் போன மச்சான்

10. நாகூர் ரூபி எழுதிய கவிதைத் தொகுதி ................ .

அ) கப்பலுக்குப் போன மச்சான் ஆ) நதியின் கால்கள்

இ) புதியபார்வை ஈ) மீட்சி

11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ............... வேண்டினார்.

அ) கருணையன் பூக்களுக்காக ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் எலிசபெத்துக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

12. வாய்மையை மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்

இ) உருவகம் ஈ) தீவகம்

13. தமிழின் முதல் அகராதி

அ) யாழ்பாண அகராதி ஆ) நடுநாட்டுச் சொல்லகராதி

இ) சதுரகராதி ஈ) சொல் சுருக்க அகராதி

14. தேம்பாவணி பிரிப்பு முறை ................. .

அ) தேம்பா + வணி ஆ) தேன் + பா + அணி

இ) தேம் + பாவணி ஈ) தே + பாவணி

15. தேம்பாவணியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ............... .

அ) 3815 ஆ) 3715

இ) 3615 ஈ) 3415

## இயல் – 9 ஜெயகாந்தன் – நினைவு இதழ்

**குறுவினா :**

1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. - இத்தொடரை இரு தொடர்களாக்குக.
2. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?
3. ஜெயகாந்தன் தான் எழுதுவதற்கான காரணம் எனக் கூறியது யாது?

**சிறு வினாக்கள் :**

1. ஜெயகாந்தன் எழுதிய புதினங்கள், குறும் புதினங்கள் சிலவற்றை எழுதுக.
2. திரைப்படமான ஜெயகாந்தனின் படைப்புகள் யாவை?
3. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் `தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

**நெடுவினா :**

1. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

### கவிதைப்பேழை - சித்தாளு

**குறுவினா :**

1. `வாழ்வில் தலைக்கனம்' `தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
2. யாருடைய தலையெழுத்து கற்காலமானது?

**சிறுவினா :**

1. `சித்தாளின் மனச்சுமைகள்
   செங்கற்கள் அறியாது' - இடஞ்சுட்டிப் பொருள் தருக.
2. நாகூர் ரூமி - சிறுகுறிப்பு வரைக.

### கவிதைப் பேழை - தேம்பாவணி

**குறுவினாக்கள் :**

1. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக்
   காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?
2. தேம்பாவணி - பொருள் கூறுக.
3. வீரமா முனிவரின் படைப்புகள் யாவை?
4. வீரமா முனிவர் கருணையன் என்று யாரை அழைக்கிறார்?

### இலக்கணம் - கற்கண்டு - அணிகள்

**குறுவினாக்கள் :**

1. தீவக அணியின் வகைகள் யாவை?
2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

**சிறுவினாக்கள் :**

1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்று காட்டி விளக்குக.
2. தீவக அணியைச் சான்று காட்டி விளக்குக.
3. நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.
4. தன்மையணியை விளக்குக. சான்று தருக.

## இயல் – 9 இலக்கணம்

1. அணி என்ற சொல்லின் பொருள்
அ) அழகு ஆ) இலக்கணம்
இ) கட்டுதல் ஈ) உவமை
2. கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறும் அணி
அ) தீவக அணி ஆ) நிரல் நிறை அணி
இ) தற்குறிப்பேற்றணி ஈ) உருவக அணி
3. தீவகம் என்ற சொல்லின் பொருள்
அ) தீவு ஆ) விலக்கு
இ) தரளுப்பு ஈ) அழகு
4. தீவக அணியின் வகைகள்
அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஐந்து
5. பாடலின் முதலில் நிற்கும் சொல் இறுதிவரை இணைந்து பொருள் தருவது
அ) முதலினைத் தீவக அணி ஆ) இடைநிலைத் தீவக அணி
இ) கடைநிலைத் தீவக அணி ஈ) நிரல் நிறை அணி
6. `வாய்மையே மழைநீரா' - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) தற்குறிப்பேற்றணி ஈ) நிரல்நிறை அணி
7. உள்ளதை உள்ளவாறு கூறுதல்
அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) தன்மை அணி ஈ) நிரல் நிறை அணி
8. தன்மையின் வகைகள்
அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு ஈ) ஆறு
9. அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வரும் அணி
அ) தீவக அணி ஆ) உருவக அணி
இ) நிரல் நிறை அணி ஈ) உவமை அணி
10. எவ்வகைப் பொருளும் மெய்யவகை விளங்கும்
கொள் முறை தொடுப்பது - எவ்வகை அணி
அ) தீவக அணி ஆ) உருவக அணி
இ) தன்மை அணி ஈ) உவமை அணி

மொழித்திறன் பயிற்சிகள் :

1. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக. (பக்கம் - 47)
2. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக. (பக்கம் - 23)
3. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்கள் அமைக்க. (பக்கம் - 23)
4. எண்ணும் பெயர்களை தமிழ் எண்களில் எழுதுக. (பக்கம் - 23, 180, 200, 228)
5. கலைச் சொல் தருக. (அனைத்து இயல்களும்)

6. சொற்களை இணைத்துப் பொருத்தமான தொடரை உருவாக்குக. (பக்கம் - 23)
7. மரபுத் தொடர்களுக்கான பொருளறிந்து தொடரில் அமைக்க. (பக்கம் - 199)
8. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்று. (பக்கம் - 150)
9. மொழிப்பெயர்ப்பு ( அனைத்து இயலும்)
10. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்தி எழுதுக. (பக்கம் - 21)
11. சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக. (பக்கம் - 21)
12. வினைமுற்று வினையாலணையும் பெயராக மாற்றி தொடர்களை இணைத்து எழுதுக. (பக்கம் - 22)
13. இத்தொடர்களில் உள்ள வன் சொற்களுக்கு பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை மீள எழுதுக. (பக்கம் - 22)
14. அகராதியில் காண்க. (அனைத்து இயல்கள்)
15. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (அனைத்து இயல்கள்)
16. அறிவை விரிவு செய். (அனைத்து இயல்)
17. நிற்க அதற்கு தக. (சூழலுக்கு ஏற்ப எழுத வேண்டும்) அனைத்து இயல்கள்)
18. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க. (பக்கம் - 45)
19. சொல்லக் கண்டுபிடித்து புதிரை விடுவிக்க. (பக்கம் - 47)
20. பழமொழி நிறைவு செய்க. (பக்கம் 67)
21. விடுபட்ட எழுத்துக்களை நிரப்பி அந்த எழுத்துக்களை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டு பிடிக்க. (பக்கம் - 68)
22. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் 68, 96)
23. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக. (பக்கம் - 95)
24. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக. (பக்கம் - 96)
25. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக. (பக்கம் - 97)
26. அட்டவணையில் விடுபட்டதை எழுதுக. (பக்கம் - 123)
27. தொடர்களில் உள்ள எழுவாயை செழுமைச் செய்க. (பக்கம் - 123)
28. படிவத்தை நிரப்புக.
    1) நூலக உறுப்பினர் படிவம் (பக்கம் - 124)
    2) மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம். (பக்கம் - 227)
29. தொழிற் பெயர்களின் பொருளை புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க. (பக்கம் - 125)
30. பிறமொழிச் சொற்களை தமிழ் சொற்களாக மாற்றி எழுதுக. (பக்கம் - 150)
31. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக. (பக்கம் - 152)
32. பொருத்தமானவற்றை சொற்பெட்டியில் கண்டு எழுதுக. (பக்கம் - 152)
33. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமா னதொடரை அமைக்க. (பக்கம் - 180)
34. கவிதையை உரையாடலாக மாற்றுக. (பக்கம் - 181)
35. ஊர் பெயர்களின் மரூஉவை எழுதுக. (பக்கம் - 181)
36. உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்று. (பக்கம் - 199)

தமிழ்த்துகள்

37. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக. (பக்கம் - 200)
38. உவமையைப் பயன்படுத்தி சொற்றொடரை உருவாக்குக. (பக்கம் - 225)
39. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக. (பக்கம் - 225)
40. விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றி அமைக்க. (பக்கம் - 228)
41. நயம் பாராட்டுக. (பக்கம் - 22, 68, 96, 198, 200)

1. இலக்கணக்குறிப்புகளில் பயிற்சி பெறுக.
2. பகுபத உறுப்பிலக்கணங்களில் பயிற்சி பெறுக.
3. அலகிடுதலில் பயிற்சி பெறுக.
4. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கவிதைப்பேழைகளின் ஆசிரியர்கள் நூலின் பெயர்களை அறிந்து கொள்க.
5. உரைப்பகுதி பாடல்கள் கொடுத்து கேட்கப்படும் வினாக்களில் பயிற்சி பெறுக.

**கட்டுரை, கடிதம், மதிப்புரை, நய உரை, வாழ்த்துரை**

**கட்டுரை :**

1. சான்றோர் வளர்த்த தமிழ். (பக்கம் - 22)
2. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும். (பக்கம் - 96)
3. கவிதையாக்குக. (சூழல் புரிந்து கதையாக்குதல். ) பக்கம் - 68)
4. அரசுப் பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக. (பக்கம் - 151)

**கடிதம் :**

1. உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலைக் கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக. (பக்கம் - 68)
2. நாளிதழ் ஒன்றில் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிடவேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக. (பக்கம் - 180)
3. உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுது நீக்கித் தருமாறும் இடையூறுகளை களைந்தும் ஆவண செய்யும்படி மின் வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக. (பக்கம் - 199)
4. **வாழ்த்து மடல் : கடிதம்**
   மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (பக்கம் - 46)

**மதிப்புரை :**

1. பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை - கட்டுரை - சிறுகதை - நூலுக்கான மதிப்புரை எழுதுக. குறிப்பு : நூலின் அமைப்பு - நூலின் மையப் பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர். (பக்கம் - 124)

**நன்றியுரை :**

1. பள்ளி வளாகத்தில் நடைபெற்ற `மரம் நடுவிழாவுக்கு' வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் `பசுமைப் பாதுகாப்பு படை' சார்பாக நன்றியுரை எழுதுக.